# NEW TESTAMENT.

உலக இரட்சகராகிய

இயேசுக்கிறிஸ்துநாதர் அருளிச்செய்த

# புதிய ஏற்பாடு.

இஃது

மூலவாக்கியம் இரேனியுசையரால்

கிரேக்க பாஷையிலிருந்து

தமிழிலே திருப்பப்பட்டும்.

சென்னபட்டணத்திலுள்ள

சத்தியவேதசங்கத்தாரால் பரிசோதிக்கப்பட்டும்

இருக்கிறது.

கி. பி. ௧௮௫௭—ஷுலே

சென்னபட்டணத்தில் அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

88

YALE MISSIONARY LIBRARY DIVINITY SCHOOL.

MADRAS:
THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY.
Printed by P. R. Hunt, American Mission Press,
167, Popham's Broadway.
1857.

YALE · MISSIONARY · LIBRARY, DIVINITY · SCHOOL.

# மத்தேயு என்பவர்

## எழுதின சுவிசேஷம்.

### க. அதிகாரம்.

ஆபிரகாமின் சந்ததியாகிய தாவீதின் சந்ததியாயிருக் க
கிற இயேசுக்கிறிஸ்துவினுடைய வம்சவரிசையின் அட்
டவணையாவது: — ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; உ
ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதா
வையும், அவன் சகோதரரையும் பெற்றான். — யூதா ௩
தாமார் என்பவளைச் சேர்ந்து, பாரேசையும் சாராவை
யும் பெற்றான்; பாரேசு எசுரோமைப் பெற்றான். —
எசுரோம் ஆராமைப் பெற்றான்; ஆராம் அமினதா ௪
பைப் பெற்றான்; அமினதாபு நகசோனைப் பெற்றான்.—
நகசோன் சல்மோனைப் பெற்றான்; சல்மோன் ராகாப் ௫
பென்பவளைச் சேர்ந்து, போவோசைப் பெற்றான்;
போவோசு ரூத்தென்பவளைச் சேர்ந்து, ஓபேத்தைப்
பெற்றான்; ஓபேத்து ஈசாயைப் பெற்றான். — ஈசா ௬
இராசனாகிய தாவீதைப் பெற்றான்; இராசனாகிய தா
வீது ஊரியாவுக்கு மனைவியாயிருந்தவளைச் சேர்ந்து,
சொலொமோனைப் பெற்றான். — சொலொமோன் உ ௭
ரோபோவாமைப் பெற்றான்; உரோபோவாம் அபியா
வைப் பெற்றான்; அபியா அசாவைப் பெற்றான். —
அசா யோசபாத்தைப் பெற்றான், யோசபாத்து யோரா ௮
மைப் பெற்றான்; யோராம் ஓசியாவைப் பெற்றான்.—
ஓசியா யோத்தாமைப் பெற்றான்; யோத்தாம் ஆகா ௯
சைப் பெற்றான்; ஆகாசு எசேக்கியாவைப் பெற்
றான்.—எசேக்கியா மனாசேயைப் பெற்றான்; மனாசே ௰
அமோனைப் பெற்றான்; அமோன் யோசியாவைப் பெற்
றான். — (யூதர்கள்) பாபிலோன் தேசத்துக்குச் சிறை ௰க
பட்டுப்போகும் காலத்திலே, யோசியா எகோனியா